கல்யாண முகூர்த்தப் புடவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்.
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 24 செவ்வாய்க்கிழமை (09 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 346

## சமாதான பேச்சுக்களுக்கு இனி இடமில்லை தலைவர் பிரபா கூறியதாக பி.பி.சி. அறிவிப்பு

கொழும்பு, நவ. 9
ஜனாதிபதி விஜேதுங்கா வெளியிடும் கடும் போக்குக் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் —

தாங்கள் முழுப் போருக்கு தயாராவதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அண்மையில் ஆற்றிய உரை ஒன்றின் நகல் தங்களுக்குக் கிடைத்திருப்பதாகவும் —

அந்த உரையில் தலைவர் பிரபாகரன் இது பற்றி பிரஸ்தாபித்திருப்பதாகவும் பி. பி. ஸி. அறிவித்திருக்கிறது.

பி. பி. ஸியின் தமிழ், சிங்கள சேவைகளில் இது குறித்து நேற்று அறிவிக்கப்பட்டதாவது:-

அரசின் கடும் போக்குக் காரணமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேலும் சமாதானப் பேச்சுக்களை நடத்தக்கூடிய ஏதுநிலை இல்லை- என்று இப்பேச்சில் திரு. பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி விஜே துங்கா இனப்பிரச்சினையை வெறும் பயங்கரவாதம் என்று மீண்டும் மீண்டும் விவரித்து வருகின்றார்.

ஆனால் திரு. பிரபாகரன் இப்போது ஆற்றியிருக்கும் உரை, விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை நடத்தக் கூடிய ஏது நிலையில் இல்லை என்பதை முதன் முதலாக பகிரங்கமாகக் கோடி காட்டியுள்ளது.

வடபகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் பின்னர் திரு. பிரபாகரன் இக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

வடபகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களை ஆயுதம் ஏந்தும் படியும் விடுதலைப் புலிகள் தலைவர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆத்மபூர்வமாக, தியாக உணர்வுடன் செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

### நம்பக்கூடாது

போருக்கு சமாதானத் தீர்வு ஏற்படும் என்று தமிழ் மக்கள் இனிமேலும் நம்பக் கூடாது என்றும் —

(3ஆம் பக்கம் பார்க்க)



## மகளை இயக்கத்தில் இணைத்த பெற்றோர்

யாழ்ப்பாணம், நவ. 9
முல்லைத்தீவு மாவட்டம் அம்பலவன் பொக்கணை என்ற இடத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கின் போது மாலினி என்ற பெண்ணை அவரது பெற்றோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்தனர்.

இவர்கள் திருகோணமலையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ளனர். (உ-த)

## அம்பிலாந்துறையில் குண்டு வெடிப்பு! சிப்பாய் பலி!!

யாழ்ப்பாணம், நவ. 8
மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் கடந்த புதனன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயமடைந்தார்.

வீதியில் காணப்பட்ட பொருள் ஒன்றை படையினர் எடுத்தபோது அது வெடித்தது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜீ.என். சமரசிங்க என்ற சிப்பாயே அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டார். (உ-5)

## செக்கிள் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ்ப்பாணப் பகுதியில் சைக்கிள்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முன்னர் 9 ஆயிரம் ரூபா விற்கப்பட்ட ஆண்கள் 'லுமாலா' சைக்கிள் 7 ஆயிரம் ரூபாவாகவும், பெண்கள் 'லுமாலா' சைக்கிள் 7 ஆயிரத்து 500 ரூபாவாகவும் தற்போது விற்கப்படுகிறது.

சைக்கிள் எடுத்து வர விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருப்பதை அடுத்தே விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. (உ-162)

## ராணுவ தளபதியின் கோரிக்கைக்கு கண்டனம்

கொழும்பு, நவ. 9
யுத்தச் செய்திகளைப் பிரசுரிப்பதைத் தடைசெய்ய வேண்டும் என இராணுவத் தளபதி கோரியிருப்பதன் நோக்கம், அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலீஸாரும் படையினரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இரகசியமாக வைப்பதேயாகும்.

சு. கவின் எம். பியும் மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் செயலாளருமான மஹிந்த ராஜபக்ஷ கண்டன அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இராணுவ நடவடிக்கைகளின் இரகசியத் தன்மையை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை, மட்டு., திருமலை, வவுனியா, கிளிநொச்சிக்கு
# ஐ. நா. செயலாளரின் விசேட தூதர் அகதிகளை பார்வையிட வருகிறார்
## ஆனால் யாழ். வரமாட்டார்

கொழும்பு, நவம்பர் 9
இலங்கையில் இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் சுமார் ஆறு லட்சம் அகதிகளின் நிலையை நேரில் கண்டறிவதற்காக ஐக்கிய நாடுகள் சபை செயலாளர்நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒருவர் இவ்வாரம் இலங்கை வரவிருக்கிறார்.

கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் புறங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்கள் ஆகியவற்றுக்கு அவர் விஜயம் செய்து, அங்கு தங்கியிருக்கும் அகதிகளின் நிலையை நேரில் கண்டறிவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நாவின் உயர்மட்ட அதிகாரியான திரு. பிரான்ஸிஸ் டென் என்ற இந்த அதிகாரி இவ்வாரம் கொழும்பு வந்து சேருவார்.

அவர் விஜயம் செய்யவிருக்கும் தமிழ் மாவட்டங்களில் கிளிநொச்சி மட்டுமே பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என்றும் —

அவர் விஜயம் செய்யும் ஏனைய தமிழ் மாவட்டங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பவை என்றும் —

இதன்படி —

யாழ். மாவட்டத்திற்கான விஜயம், அவரது இலங்கை வருகைக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை எனக் கருதப்படுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ-6)

## அநுராவைச் சேர்த்ததால் பிரதமர் ரணில் அதிருப்தி!

கொழும்பு, நவ. 9
அநுரா பண்டாரநாயக்காவையும் அவரது ஆதரவாளர்களையும் ஐ. தே. கவில் சேர்க்க எடுக்கப்பட்ட முடிவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் ஆசியுடன் ஐ.தே.க. செயலாளர் சிறிசேன கூரே அநுரா பண்டாரநாயக்காவுடன் பேச்சு நடத்தி வந்தார். ஆனால் இந்தப் பேச்சுகள் குறித்து பிரதமர் ரணிலுக்கோ அல்லது கட்சியின் இரண்டாவது கட்ட தலைவர்கள் எவருக்குமோ எந்தவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும்-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு வெளியே இருக்கும் போது - அவருக்கு முன்னறிவிப்பு எதுவும் வழங்கப்படாத நிலையில் - அநுரா பண்டாரநாயக்கா ஐ. தே. கவில் சேருவது பற்றிய தகவல் பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்டது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அநுரா பண்டாரநாயக்காவுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எதிராக பிரதமர் ரணில் நீண்டகாலமாக பகைமை பாராட்டி வந்திருக்கிறார் என்றும் -

றோயல் கல்லூரியில் இருவரும் கல்வி பயின்ற காலத்திலேயே கீரியும் பாம்புமாக இருந்து வந்தனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

# மாவீரர் வாரம் கொண்டாட தமிழீழம் தயாராகுகிறது

யாழ்ப்பாணம், நவ. 9
இம்மாதம் நான்காம் வாரத்தில் மாவீரர் வாரத்தையும்- அதற்கு முன்னைய வாரத்தில் மாவீரர் எழுச்சி வாரத்தையும் கொண்டாடுவதற்கு தமிழீழம் தயாராகி வருகிறது.

முன்னோடி ஏற்பாடாக மாவீரர் வாரம் பற்றிய பதாகைகள் பரவலாக வீதிகள் பிரதான சந்திகள் தோறும் கட்டப்பட்டிருக்கின்றன.

அலங்கார வளைவுகளை அமைக்கும் பணிகளும் ஆங்காங்கே தொடங்கியுள்ளன.

மாவீரர் வாரத்தை சிறப்பாகக் கொண்டாடும் ஏற்பாடுகளில் பொதுமக்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். (உ-15-162)

### குப்பாக்கிச் சூட்டில்
## காயமடைந்த மீனவர் படையினரிடம் சிக்கினார்
### மண்டைதீவுக் கடலில் சம்பவம்

மண்டைதீவு - கழுவந்தீவு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மீனவர் காயமடைந்தார். அவர் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் கூடச் சென்ற மற்றிரு மீனவர்களும் நீந்திக் கரைவந்து சேர்ந்தனர்.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த செல்லத்துரை ரவீந்திரன் (சம்மாட்டி- வயது 34) என்பவரே காயமடைந்த நிலையில் படையினரிடம் சிக்கிக் கொண்டார்.

காயமடைந்தவரை படையினர் கைது செய்து கொண்டு சென்றிருக்கலாமென அவரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விக் கல்லூரிப் பயிற்சி: விண்ணப்ப முடிவு நாளை

யாழ்ப்பாணம், நவ. 9
ஆசிரிய கல்வி உயர்தொழிற் பயிற்சி நெறிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1992 அல்லது அதற்கு முன்னர் நடந்த ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்து 200 க்கும் குறையாத மொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்கள் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். (கணித பாட உடற்கல்வி நெறிகளுக்கு 170 புள்ளிகளுக்குகுறையாதமொத்தப் புள்ளிகளைப் பெற்றால் போதுமானது)

தமிழ் மொழி மூலம் பயின்றவர்கள் வவுனியா கல்விக் கல்லூரிக்கும் அட்டாளைச் சேனைக் கல்விக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படுவர்.

பயிற்சி நெறி மூன்று வருடங்களுக்கு நடைபெறும்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கணனி கண்காட்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 9
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணனிக் கிளையினர் யாழ். பல்கலைக் கழகத்துடனும், யாழ். மாவட்டத்தில் உள்ள கணனி கல்வி நிறுவனங்களின் ஆதரவுடனும் நடத்தும் கணனி இலத்திரனியல் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தில் ஆரம்பமாகும். தொடர்ந்து 11 ஆம் 12 ஆம் திகதிகளிலும் கண்காட்சி இடம்பெறும்.

கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம், கணனி இலத்திரனியல் தொழில் நுட்பம், அடிப்படைத் தத்துவங்கள், கணனியின் வரலாறு கணனியின் வித்தைகள், கணனி விளையாட்டுக்கள் என்பன கண்காட்சியில் இடம்பெறுகின்றன. (உ-5)

### முச்சந்தி முரளி



இரண்டு பிரதமர்களின் மைத்துனன் எல்லோ...... அதுதான் உந்தப் பிரதமர் பயப்பிடுறார்......!

## சிங்களவரின் கேள்விக்கு தலைவர் பதில் தருவார்!
### 'லங்காதீப' பத்திரிகை அறிவிப்பு

கொழும்பு, நவ. 9
சிங்கள மக்கள் கேட்கும் கேள்விகளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி, அவரின் பதிலைப் பெற்றுப் பிரசுரிக்க தாங்கள் ஏற்பாடு செய்திருப்பதாக ''லங்காதீப'' பத்திரிகை நிறுவனத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

''லங்காதீப'' பத்திரிகையின் செய்தியாளர்கள் சிலர் அண்மையில் யாழ். வந்து திரும்பியது தெரிந்ததே.

இந்தப் பத்திரிகையின் ஞாயிறு இதழ்களில் வாரந்தோறும் —

தமிழ், சிங்கள அரசியல் வாதிகள் மற்றும் மக்கள் தலைவர்களில் ஒருவரிடம் சிங்கள மக்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்கள் பிரசுரமாகி வருகின்றன.

அண்மையில் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ்

( 3ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி. தூதரக அதிகாரிகள் அகதிகளை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், நவ. 9
கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரக உயர்அதிகாரி வவுனியாவுக்கு விஜயம் செய்து, அங்குள்ள இடம் பெயர்ந்த மக்களின் நிலையை நேரில் பார்த்தார்.

தூதரகத்தின் அபிவிருத்திச் செயலாளரான திரு. டெனிஸ் கடந்த வெள்ளியன்று வவுனியாவில் வேப்பங்குளம் இடம் பெயர்ந்தோர் அகதி முகாமையும் இடம் பெயர்ந்தோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள கூழாங்குளம் கிராமப்பகுதியையும் பார்வையிட்டார்.

தங்களுக்கு நிவாரணமோ, மீளக் குடியமர்த்தப்பட்டோருக்கான நிதியோ வழங்கப் படவில்லை என அங்குள்ளோர் அவரிடம் தெரிவித்தார்கள்.

( 3ஆம் பக்கம் பார்க்க)

### கடைச் சிப்பந்திகள் உட்பட
## 196 தமிழர் கைது புறக்கோட்டையில்!

கொழும்பு, நவ. 9
கடந்த சனிக்கிழமை கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 196 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

தீபாவளி வியாபாரம் களை கட்டியிருக்கும் இந்நாட்களில் அதிகாலை 4 மணியளவில் புறக்கோட்டை பிரதான வீதிக் கடைகளை கடற்படையினரின் உதவியுடன் இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர். சுமார் 2 மணித்தியாலம் இடம்பெற்ற சுற்றிவளைப் பின்போது கடைகளில் பணியாற்றும் பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

( 3 ஆம் பக்கம் பார்க்க)

உன்காலடியில் எதிரியின் கவசவாகனங்கள்
தலைக்கு மேலே குண்டுவீச்சு விமானங்கள்
வலது பக்கம் பீரங்கிப் படகுகள்
இடது பக்கம் இராணுவப் படைகள்
இன்னும் உறங்கி என்னடா செய்வாய்?
விழிகளைத் திறந்து வெளியே வாடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

5 K. V. மின்வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், Panasonic V. D. O. Mixer ஒன்றும், (WJ-MX-10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 தொடக்கம் 12 மணிவரை. ரெலிகோணர், நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி. (6583)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு மிக அருகாமையில் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி வனிதாதேவி விவேகானந்தம், செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27931)

### காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி, கொழும்புத்துறை றோட்டில் கச்சேரி, தனியார் பாடசாலைகளுக்கு அண்மையில் 1½ பரப்புக் காணி மூன்று பக்க மதில், கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. சிவசுப்பிரமணியம், ஓய்வுபெற்ற விரிவுரையாளர், பனிக்கர் ஒழுங்கை திருநெல்வேலி. (27864)

### ஆவே மரியா

சேமாலைகள், செபமாலை தியானப் புத்தகங்கள், அந்தோனியார் நவநாள், ஆரோக்கிய மாதா, பாதுகாவலன் பத்திரிகை விற்பனைக்குண்டு. புனித சிந்தாத்திரை மாதா இல்லம், இல. 92, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (27956)

### எவர்விஷன்

எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்து அதிக காலமாக எடுக்காத T.V., டெக் என்பவற்றை உடன் திரும்பப் பெற்றுக்கொள்ளவும். (சி-6525)

### நாளை சனி மாற்றம்

31-5-95 வரை கும்ப ராசியிலேயே சனி சஞ்சரிக்கும். சனி, வியாழன் மாற்றப் பலன்களும், எண்ஜோதிட பலாபலன்களும் ரூபா 10/-. பாடசாலை, அலுவலக உபகரணங்களுக்கும், தீபாவளி வெளியீடுகளுக்கும் சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (27959)

### இலவச திருமண சேவை

29 வயது, சதயம், செவ்வாயற்ற, ஜேர்மனியில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (27954)

### காணவில்லை

சிறுவர்கள் அணியும் கைச்செயின் (பின்னல்) தபால் பெட்டி ஒழுங்கையிலும் திருநெல்வேலிச் சந்திக்கிடையிலும் (5-11-93) பகல் 1 மணியளவில் தவறிவிட்டது. ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். காசிநாதன் ஆசிரியர், 'சுவர்ணம்', வளாக வீதி, திருநெல்வேலி. (27952)

## சீருடை இல்லை

வவுனியா, நவ. 9

வவுனியாவில் பத்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் சுமார் 750 அகதிச் சிறார்கள் சீருடைகள் இன்மையால் பாடசாலை செல்ல முடியாமல் இருக்கின்றனர் என அறியவருகிறது.

இவர்கள் தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய அகதிகள், வவுனியாவை அண்டிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோர் ஆகியோருடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். (க)

## அரசசார்பற்ற நிறுவன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 9

அரசசார்பற்ற நிறுவனம் என்றால் என்ன என்பது பற்றிய பயிற்சி கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பங்கேற்கவென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இணைய பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் 30 பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-162)


## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

**INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE**

ஆரம்பம்: **10 NOV. 93**

- வார நாட்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை)
- காலை வகுப்புக்கள்

விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peter's Lane, JAFFNA.

(சி/6530)



## உடனடி வேலை வாய்ப்பு

தென்மராட்சியில் இயங்கும் சைவ, அசைவ உணவகத்திற்கு பின்வருவோர் தேவை

1. சுவையான சைவ, அசைவ உணவு வகைகள் தயாரிக்கக் கூடியவர்கள்
2. சுவையான புரியாணி, கொத்து ரொட்டி தயாரிக்கக்கூடியவர்கள்

உங்கள் அனுபவத்தை குறிப்பிட்டு சுயமாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: **26 — 11 — 1993**

விண்ணப்பிக்கும் முகவரி:

**VIMALAS**
9-15, MODERN MARKET,
CHAVAKACHCHERI. (27958)


## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்!

ஸ்ரீ வேவில் வீரகத்தி விநாயகர் அருளுடன்,
நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசித் திங்கள் 26ஆம் நாள் (11-11-1993)
வியாழக்கிழமை சித்தயோகமும், அத்த நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில்
காலை 8-35 முதல் 10-39 வரையில் உள்ள தனு லக்கின சுப
முகூர்த்த நேரத்தில் பம்பலப்பிட்டி ஸ்ரீ பழைய கதிரேசன்
ஆலயத்தில் (123, காலி வீதி, கொழும்பு - 4)

| | |
|---|---|
| திரு. திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின் குமாரன் திருவளர் செல்வன் **ரவிநாதன் (ரவி)** (கனடா) அவர்களுக்கும் | திரு. திருமதி யோகேஸ்வரன் தம்பதிகளின் குமாரி திருவளர் செல்வி **உமாமகேஸ்வரி (உமா)** அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அத்தருணம் தாங்கள், தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து திருமணவிழாவினை சிறப்புற நடத்தி வைத்து மணமக்களை ஆசீர்வதிக்கும்
★ வண்ணம் கேட்டுக் கொள்கிறோம் ★

— சுபம் —

உங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி பொன்னுத்துரை, சாமிலா இன், இல. 324/1, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. [உழுத்தம்பி, வல்வெட்டி.] | திரு. திருமதி யோகேஸ்வரன், சாமிலா இன், இல. 324/1, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. [கொத்தன்கலட்டி, வல்வெட்டி.] |

✲ இருவீட்டார் அழைப்பு ✲

[27955]


**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**

4 MONTHS

செவ்வாய், வியாழன் வகுப்புகள்

ஆரம்பம்: **18 - 11 - 1993**
10—30 மணி

Lectures by:
S. P. SIVAPATHASUNDARAM
M.I.D.P.M. (London)

- ★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்
- ★ கட்டணம் தவணை முறையில் மாதம்- ரூ. 400/- மட்டுமே
- ★ Basic கற்கும் மாணவர்களுக்கு Lotus, Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை.
- ★ அச்சடித்த பாடக் குறிப்பு
- ★ கூடிய செய்முறைப் பயிற்சிகள்
- ★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-6333)



## பதவி வெற்றிடம்

தென்மராட்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்குத் தகுதியும் தகைமையும் உள்ளோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பிக்கவும்.

I
1. இலத்திரனவியல் பொறியியலாளர்கள்
2. தொலைத்தொடர்பு பொறியியலாளர்கள்
3. கணனி இயந்திரவியல் பொறியியலாளர்கள்
4. கணனி திட்டமிடல் பொறியியலாளர்கள்
5. தொழில் நுட்பவியலாளர்கள்

II விரிவுரையாளர்கள்
1. இலத்திரனியல்
2. கணனி
3. பொறியியல் பட வரைஞர்

விண்ணப்ப முடிவு திகதி: **26 — 11 — 1993**

விண்ணப்பிக்கும் முகவரி:

**ரெலி கோணர்,**
நவீன சந்தை (மேல்மாடி),
சாவகச்சேரி.

[27957]


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சத்தியரூபா குணநாயகம்**

திதி — 9 - 11 - 1993

கன்றிழந்த பசுவினைப்போல் காலமெலாம் நான்கதற
கண்மணியே எனைப்பிரிந்து வானுலகம் சென்றாயே
ஈன்றவள் அருகிருக்க உடன்பிறந்தோர் சூழ்ந்திருக்க
ஈத்துன்னை ஆட்கொண்ட காலனே உந்தனுக்கு
காலமொன்று வாராதோ கொடுந்துன்பம் மறவாயோ
கண்மணியே! குலவிளக்கே! ஆலயத்துத் திருவிளக்கே
மண்ணுலகில் நாமிருந்து அஞ்சலித்து வாழ்வதற்கு
விண்ணுலகில் நீயிருந்து விழிகாப்பாய் எம்குலத்தை.

தாய், சகோதரங்கள்,
உறவினர்கள்,

46/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி. (27953)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

# "3ஆவது" வதிவிட வேளாண்மைப் போட்டி

## 1993/1994 யாழ். மாவட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பேரினவாத ஒடுக்கு முறைகளில் இருந்து எம் மக்களை விடுவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சார்ந்து நிற்கும் பொருளாதார நிலையில் இருந்து தமிழ் மக்களை விடுபடச் செய்து எமது சொந்த மண்ணில் சொந்தக் கால்களில் தங்கி நிற்கும் தன்னிறைவான பொருளாதார வாழ்வைக் கட்டி எழுப்புவதற்கு வழி வகுத்துள்ளது.

இப்பணியில் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தமிழீழ மக்கள் அனைவருமே இன்று எதிர் கொண்டுள்ள பாரிய பொருளாதார சுமையினின்றும் விடுபட பல்வேறு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகிறது.

இவ்வாறாக வதிவிட வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் இரண்டாவது முறையாக 1993/94 காலப் பகுதியில் யாழ். குடாநாட்டிற்குட்பட்ட குடியிருப்பாளர்களை உற்பத்தி முயற்சியில் ஈடுபடவைக்கவும் வதிவிட வேளாண்மைப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து குடியிருப்பாளர்களும் தமது வீடு அமைந்துள்ள காணியில் அல்லது வதிவிடத்திற்கு அண்மையாக உள்ள 4 பரப்புக்கு உட்பட்ட காணியில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பரிசில்களையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிக்கொள்கிறது.

### போட்டிகளுக்கான நிபந்தனைகள்:-

01. வீடு அமைந்திருக்கும் வசதிக்கேற்ப வதிவிட பயிர்ச் செய்கையை கவர்ச்சிகரமாக அமைத்தல்.

02. 10அடி நீளம் 3 அடி அகலமும் ஆன பாத்திகளில் உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான வெண்டி, மிளகாய், புசிற்றாவோ, பயிற்றை, கத்தரி, புடோல், பாகல், தக்காளி, பீர்க்கு, அவரை போன்றவையும் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களான போஞ்சி, முள்ளங்கி, பூக்கோவா, பீற்றுட், கரட் போன்றவையும் இவற்றுள் குறைந்தது (5) ஐந்து வகை பயிர் இனங்களில் (3) மூன்று உள்நாட்டு மரக்கறி வகைகளும் மேல் நாட்டு மரக்கறி வகைகளில் இரண்டும் (2) செய்கை பண்ணப்பட்டு இருத்தல் வேண்டும்.

    அத்துடன் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைப் பயிர்களில் ஒன்று முக்கியமாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

    சோளம், கம்பு, இறுங்கு போன்ற தானியப் பயிர்களில் ஏதாவது ஒன்று முக்கியமாக பயிரிடப்பட்டிருத்தல் வேண்டும்.

03. 10 அடி நீளமும் 3 அடி அகலமுமான பாத்திகளில் இலைவகைகள் மரக்கறிப் பயிர்களான பொன்னாங்காணி, முளைக்கீரை, பசளி, கங்குன் கீரை, வல்லாரை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு வகை இருத்தல் வேண்டும். அத்தோடு அகத்தி, முருங்கை, தூதுவளை, சண்டி, முல்லை, முசுட்டை ஆகியவற்றில் குறைந்தது இரண்டு இனமாதல் இருத்தல் வேண்டும்.

04. மஞ்சள், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், மல்லி, கருவேற்பிலை' றம்பை போன்ற இனங்களில் மூன்று (3 நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்)

05. பழ மரங்களான பப்பாசி, வாழை, மரக்கொய்யா, தோடை, மாதுளை, கொடித்தோடை, பலா, எலுமிச்சை ஆகியவற்றுள் 4 மரங்கள் புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பயனுள்ள மரங்களான தென்னை ஒன்று அல்லது கமுகு இரண்டு ஆகியவை புதிதாக நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

07. கூட்டெரு, குழி முறையிலோ, குவியல் முறையிலோ மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

08. தேனீ வளர்த்தல்:-
    குறைந்தது ஓர் பெட்டியிலாவது அல்லது மரக் கொட்டுகளிலாவது வளர்ப்பில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

09. கோழி வளர்த்தல்:-
    குறைந்தது (10) பத்து கோழிகள் (கூடு அமைப்பு) கலகூழ முறையில் வளர்த்தல் வேண்டும்.

10. தாரா ஒரு சோடி வளர்த்தல் வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக 5 கோழிகள் கூடுதலாக வளர்க்க வேண்டும்.

11. பசுமாடு ஒன்று அல்லது மறி ஆடு ஒன்று வளர்க்கப்படல் வேண்டும். இவை இரண்டையும் வளர்ப்பவர்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

12. முயல் குறைந்தது ஒரு சோடி வளர்க்கப்படல் வேண்டும்.

13. விலங்கு தீவனமாக புல்லினம், இப்பில் இப்பில், முள் முருங்கை, சீமைக் கிழுவை என்பன இருத்தல் வேண்டும்.

14. பதிவேடு பேணல்
    மரக்கறி பயிர், கால்நடை வளர்ப்பிற்கானவை தனித்தனி பேணப்படல் வேண்டும்.

### குறிப்பு:

விண்ணப்பப் படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்டச் செயலகம், கோட்டச் செயலகங்கள், கிராமிய உற்பத்திக் குழு வட்டத் தொடர்பாளர்கள் அலுவலகங்களில் பெற்று பூரணப்படுத்தி 15-11-1993 ஆம் திகதி திங்கட்கிழமை நேரடியாகவோ, அல்லது கடித மூலமாகவோ மேற்குறித்த அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிகமாகத் தேவைப்படும் விவரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட கோட்ட, வட்ட அலுவலகங்களிலும் கமநல சேவைத் திணைக்களத்திலும், விவசாய போதனாசிரியர்களிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மரக்கறி விதைகள் விண்ணப்பதாரிகளுக்கான பயிற்சிக் கூட்டத்தில் வைத்து இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்வோர் 15-11-1993 தொடக்கம் 15 - 12 - 1993 வரையுள்ள காலப் பகுதிக்குட்பட்ட நாட்களில் அனைத்துப் பயிர்களும் நாட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

### போட்டிகள் பார்வையிடும் காலம்:

முதலாம் கட்ட பார்வையிடுதல்
**01 — 01 — 1994** தொடக்கம் **20 — 01 — 1994** வரையுள்ள காலப் பகுதி.

இரண்டாம் கட்ட பார்வையிடுதல்:
**01 — 02 — 1994** தொடக்கம் **15 — 02 — 1994** வரை.

இறுதிக் கட்ட பார்வையிடல்:
**20 — 02 — 1994** தொடக்கம் **29 — 02 — 1994** வரை.

(சி-6335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்துக்கு சபாநாயகர்

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஏற்பட முடியாது. இராணுவ முயற்சிகள் — நடவடிக்கைகள் — பயன்தரா. இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக நான் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராக உள்ளேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது. பி. பி. ஸியின் தமிழ், சிங்கள சேவைகளுக்கு அளித்த செவ்விகளில் அவர் தமது நிலைப்பாட்டை விளக்கியிருக்கிறார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக சபாநாயகர் ஏற்கனவே கூறியிருந்தார். அதனை வலியுறுத்தும் விதத்தில் அவரது பி. பி. ஸி. செவ்வி அமைந்துள்ளது.

சபாநாயகர் முஹம்மது மிக மூத்த அரசியல்வாதி டட்லி சேனநாயக்கா காலத்திலிருந்தே அமைச்சராகப் பதவி வகித்து வந்தவர். ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உறுப்பினர். அதன் விசுவாசமுள்ள தொண்டர். அக்கட்சியின் வெற்றியிலும் தோல்வியிலும் பங்காற்றியவர். சிங்கள பௌத்த தொகுதியான பொரளையின் எம். பியாகத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் என்று மேடைகளில் பாராட்டப் பெற்றவர்.

இவை எல்லாவற்றையும் விட, அவர் இலங்கையின் சிறுபான்மை இனங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். முஸ்லிம் இனத்தவர். ஆகையால் இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை தமிழர்களைப் போலவே உணர்ந்திருப்பார். ஆனால் ஐ. தே. கட்சி அரசாங்கங்களில் அமைச்சராகப் பதவி வகித்தபோது இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதில் அவர் பெரிதாக அக்கறை காட்டியதாக இல்லை. பல சந்தர்ப்பங்களில் தமிழர்களின் தமிழீழக் கோரிக்கைக்குப் பாதகமான கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில், சிங்கள அரசியல்வாதிகளின், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களின் உள்ளும் புறமும் தெரிந்தவர் என்ற வகையில், நீண்ட காலமாக அவர்களின் மனப்போக்கை அறிந்தவர் என்ற வகையில், அவற்றினால் உண்டான அனுபவத்தின் முதிர்ச்சியில் இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருக்கிறார் போலும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் முயற்சி செய்யாமையை கண்டித்திருப்பது அதனையே புலனாக்குகிறது.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் தமிழருக்கு மட்டுமன்றி முஸ்லிம்கள், சிங்களவர்களுக்கும் கஷ்டங்கள் வரும் என்று அவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

தொண்டமானின் சமாதான முயற்சியைக் குழப்பியது போல, தமது முயற்சியை, தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் குழப்புவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்ற தொனியிலும் அவரது செவ்வி அமைந்துள்ளது. நாடாளுமன்ற சபாநாயகர் என்ற வகையில் சமாதான முயற்சியைத் தம்மால் முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையும் அவரிடம் காணப்படுகிறது.

இனப்பிரச்சினையே இல்லை என்று கூறிவரும் ஜனாதிபதியையும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை காண விரும்பாத சிங்கள அரசியல்வாதிகளையும், சிங்களப் பேரினவாதிகளையும் மீறிக்கொண்டு, எதிர்நீச்சல் அடித்து முஹம்மது யாழ்ப்பாணம் வருவாராயின், அது பெரும் திருப்பமாகவே அமையும். ஆனால் அவர் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இல்லாமல் வெறும் சபாநாயகராக அல்லது முஹம்மதுவாக வந்தால் சமாதானத்துக்குச் சாத்தியமான ஒரு நிலையை உருவாக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே.

## சுதந்திரப் பறவைகள் இன்று வெளியாகும்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வமான ''சுதந்திரப்பறவைகள்'' பத்திரிகையின் கார்த்திகை மாத இதழ் இன்று வெளியாகவுள்ளது.

''பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இவ்வாண்டு பெருமளவு வீழ்ச்சி'' என்ற தலைப்புச் செய்தியும் மற்றும் பல அம்சங்களும் அந்தப் பத்திரிகையில் இடம்பெற்றுள்ளன.

## லங்கா சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 9

லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ். ஆஸ்பத்திரி வீதி, வர்த்தக வங்கியில் நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை வழங்கப்படும். (த-45)

# ரயில் பயணிகளுடன் சி. ஐ. டியினரும் பயணம்

## 40 தமிழர் வரை கைது

வவுனியா—கொழும்பு ரயில்களில் சி. ஐ. டியினர் பயணிகள் போன்று பயணம் செய்து தமிழர்களைக் கைது செய்கின்றனர்.

இவர்கள் ரயிலில் பயணம் செய்யும் தமிழர்களை விசாரிப்பதாகவும்—

சந்தேகம் ஏற்பட்டால் அவர்களைக் கைது செய்து ரயிலில் இருந்து இறக்கப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரத்தில் மட்டும் இவ்வாறு 40க்கு மேற்பட்டவர்கள் ரயில்களில் கைதாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# இணுவில் இந்துக் கல்லூரி பெயர்சூட்டு-பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், நவ. 9

இணுவில் இந்துக் கல்லூரி பெயர் சூட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திரு. சு. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரம்மஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள், பிரம்மஸ்ரீ இ. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், நல்லை ஆதீன முதல்வர், முன்னை நாள் அதிபர் திரு. வை. கதிர்காமநாதன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

உடுவில் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. தேவராசா, த. ஈ. வி. புலிகள் உடுவில் வட்டச் செயலக அரசியல் துறையைச் சேர்ந்த திரு. கண்ணன், கோப்பாய் பிரதேச செயலகக் கணக்காளர் திரு. மு. விஜயரகுநாதன், யாழ். போதனா வைத்தியசாலை கணக்காளர் திரு. க. சபாநாதன், உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன், இராமநாதன் கல்லூரி கொத்தணி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க)

# இன்று நடப்பவை

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள உரும்பராய் பகுதி மாதர் சங்க அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பராய் கற்பக விநாயகர் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறும். ஆரம்ப சுகாதார வழிமுறைகளும் பெண்களும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும். (த)

★ ★ ★

உளவியல் சமூக வளர்ச்சி பிரச்சினை தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10 மணியளவில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

தொழில் நுட்பக் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் வணபிதா ஜீவாபோல் கருத்துரை ஆற்றுவார். (த-162)

★ ★ ★

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பாடசாலைகளில் 10 ஆம், 11 ஆம் ஆண்டுகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

இணுவிலில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமில் யாழ்

மிட்ராவுண் றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள் இன்று காலை 9 மணி முதல் சுகாதாரப் பணியில் ஈடுபடுவர். சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றையும் அவர்கள் அங்கு நடத்துவர்.

## ஆலயங்களில்

நாகர்கோவில் வடக்கு முருகன் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறும். (க-173)

★ ★ ★

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8.45 மணி முதல் நடைபெறும். (க-113)

## சத்தியப்பிரமாணம் செய்வதற்காக விடுதலை

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் சகோதரரான மிர் முர்தஸா பூட்டோ நேற்றுசிந்துமாகாண சட்டசபையின் உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்வதற்காக சற்று நேரம் விளக்கமறியலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

பதினாறு வருட வெளிநாட்டு அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு கடந்த வியாழன் இஸ்லமாபாத் விமான நிலையத்தை வந்தடைந்த போது பொலீஸாரால் அவர் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே.

# கிட்டுவின் படத்துடன் வெளிநாடுகளில் 'ஸ்ரிக்கர்'

யாழ்ப்பாணம், நவ. 9

'' தமிழீழ இலட்சியத்தில் மீண்டும் ஓர் அர்ப்பணிப்பு'' என்ற 'ஸ்ரிக்கர்' பிரசுரம் ஒன்று வெளிநாடுகளில் வெளியிடப்பட்டுள்ளது.

தளபதி கேணல் கிட்டுவின் படத்துடன் அவருடன் வீரச்சாவடைந்த ஒன்பது போராளிகளுக்கும் வீரவணக்கம் செலுத்தி இந்த ஸ்ரிக்கர் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

# கைதாகாமல் இருக்க ரூ. $1\frac{1}{2}$ லட்சம் லஞ்சம் கொடுத்த தமிழ் வர்த்தகர்

கொழும்பு, நவ. 9

தாம் கைதாகாமல் இருப்பதற்காக உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு வடபகுதித் தமிழர் ஒருவர் ஒன்றரை லட்சம் ரூபா லஞ்சம் வழங்கி உள்ளார்.

தற்போது கொழும்பு கொள்ளுப்பிட்டியில் வசிக்கும் வர்த்தகரான மதிவாணன் என்பவரே லஞ்சம் வழங்கிய நபர் ஆவார்.

இது தொடர்பான வழக்கு சமீபத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி ஷிராணி திலகவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்பட்டது.

தேடப்படும் சந்தேக நபர் ஒருவருக்குப் புகலிடம்கொடுத்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் பொலீஸார் இவரைத் தேடி வந்தனர் என்றும்—

கைது செய்யாமல் இருக்க உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பிரியங்கா பெரேராவுக்கு இவர் ஒன்றரை லட்சம் ரூபாவை அவர் வீட்டில் வைத்து கையளித்தார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# கொடுப்பனவு எதுவும் இன்றி வவுனியாவில் அகதிகள் அவதி

யாழ்ப்பாணம், நவ. 9

வவுனியா மாவட்டத்தில் புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் கடந்த ஓராண்டாக வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து வந்து வவுனியாவில் சொந்த இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

இதற்கு வவுனியா செயலகத்தில் பணம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதாக அங்கு இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை — வவுனியா மாவட்டத்தில் ஒரு வயது பூர்த்தியடைந்த குழந்தைகளுக்கு உணவு முத்திரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளின்போது ஊனமடைந்த வவுனியா மாவட்ட வாசிகளுக்கும் இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 9

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் நில்கிரி கப்பல்மூலம் 200பீப்பா மண்ணெண்ணெயைக் கொண்டு வந்து அங்கத்தவர்களுக்கு $1\frac{1}{2}$ லீற்றர் வீதம் விநியோகித்தது அத்துடன் அயல் சங்கங்களான பருத்தித்துறை, மருதங்கேணி சங்கங்களின் பாவனையாளர்களுக்கும் $1\frac{1}{2}$ லீற்றர் வீதம் விநியோகிக்க வழங்கி உள்ளது. (க)

## பாடசாலை மாணவருக்கு

# புதிய உணவு முத்திரை இம்மாதம் முதல் கிடைக்கும்

கொழும்பு, நவ. 8

பாடசாலை சிறுவர்களின் பகல் உணவு கூப்பன்களுக்குப் பதிலாக புதிய உணவு முத்திரைகள் இம் மாதம் முதல் வழங்கப்படும்.

புனர் நிர்மாண, புனர்வாழ்வு சமூக நலவித்தி அமைச்சு, உணவு முத்திரை பெறும் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலைச் சிறுவர்களுக்கு இந்த உணவு முத்திரைகள் வழங்கும்.

புதிய உணவு முத்திரைகளைப் பெற 20 லட்சம் பாடசாலைச் சிறுவர்கள் தகுதி பெற்றுள்ளனர் என்று அறக்கொடை நிறுவன ஆணையாளர் பி. கே. குணவர்த்தன தெரிவித்தார்.

ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான 150 ரூபா பெறுமதி வாய்ந்த முத்திரைகள் இவர்களுக்கு வழங்கப்படும்.

உணவு முத்திரை பெற தகுதியுடைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களும் இந்த புதிய உணவு முத்திரை பெற விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களை கிராமசேவகர்களிடம் பெற்று அவர்கள் மூலமாக விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

# யுனிசெவ் அதிகாரிகள்; வவுனியா விஜயம்!

யுனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளனர்.

மீளக்குடியமர்த்தும் திட்டத்துக்காக கொழும்பு அரசு பெற்றுள்ள யுனிசெவ் நிதி சரியான முறையில் செலவிடப்படுகின்றதா என்றுகண்டறிவதும்—

இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறிவதுமே இவர்களின் விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## இடம் பெயர்ந்த மாணவர் கல்வி:

# கேட்டது ரூ. 220 லட்சம் கிடைத்தது ரூ. 40 லட்சம்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு கல்வி பயில வசதி அளிக்க 2 கோடி 20 லட்சம் ரூபா கோரப்பட்ட போதும் அரசு 40 லட்சம் ரூபாவையே வழங்கியுள்ளது.

இடம் பெயர்ந்த 30 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி பயில தற்காலிக கொட்டகை அமைக்கவும், தளபாடங்களை கொள்வனவு செய்யவும் 2 கோடி 20 லட்சம் ரூபாவை யாழ். கல்வி அலுவலகம் அரசிடம் கோரியிருந்ததாகவும் —

தற்காலிக கொட்டகை அமைக்க 20 லட்சம் ரூபாவும், தளபாடங்கள் கொள்வனவு செய்ய 20 லட்சம் ரூபாவும் மட்டுமே அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்படுகின்றது. (த-S)

# 10,000 ஹெக்டரில் இம் முறை பெரும்போக நெற்செய்கை

யாழ். மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரம் ஹெக்டர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்தின் பெரும்போக நெற்செய்கை புள்ளி விவரப்பட்டியில் இத்தகவலைத் தெரிவிக்கின்றது.

சென்ற ஆண்டிலும் பார்க்க இம்முறை 1,000 ஹெக்டர் நிலப்பரப்பில் கூடுதலாக நெல் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான கிருமிநாசினி [illegible] வகைகள் என்பனவற்றை கமநல சேவைகள் [illegible]மும், யாழ். மாவட்ட விவசாயக் கூட்டுறவு சமாசமும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் வழங்கி வருகின்றன.

இதுவரை விதைக்கப்பட்ட வயல் நிலங்களில் நெற்பயிர் [illegible] நிலையில் [illegible] தாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# ஆயுர்வேதப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

ஆயுர்வேத திணைக்களத்தினால் 1992 ஜூலையில் நடத்தப்பட்ட ஆயுர்வேத மருத்துவப் பரீட்சையில் (D. A. M.) சித்தியடைந்த 17 பேரின் விவரங்களை லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி வெளியிட்டுள்ளது. சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:—

இரஞ்சிதமலர் பேரம்பலம், சுகந்தி மணிவாசகம், ஜயானி சோமசுந்தரம், ஒலின்டினா பெர்னாண்டோ, வாசுகி தாளான், பிரேமலதா சிவநாதபிள்ளை, கௌரிதேவி ஜெகதீசன், கே. கமலநாதன், தேவரஞ்சினி அருள்லிங்கம், பி. சத்தியநாதன், கே. ஜீவானந்தன், லோகேஸ்வரி ஜெயராஜா, கௌரி சரவணமுத்து, கலாரதி திருநாவுக்கரசு, குழந்தைவேலு பிரின்சி, வல்லிபுரம் ஷைலா, சாந்தினிதேவி செல்லையா. (உ)

## பி. பி. ஸி. தூதரக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச படை மற்றும் அரச ஆதரவு தமிழ்க்குழுக்களின் நடவடிக்கைகளால் தாம் பெரும் அச்சம் கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-எ)

## 196 தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடை ஊழியர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவும், அவர்களை சந்திப்பதற்காகவும் கடை உரிமையாளர்கள் புறக்கோட்டை பொலீஸ் நிலையம் சென்றபோது அவர்களுக்கு அதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பது, அதனை திட்டமிடுபவர்களின் பொறுப்பாகும்.

அரசும் நிர்வாகமும் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் அவைகள் குறித்து கருத்து வெளியிடவும் மக்களுக்கு உரிமையுண்டு — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-எ-6)

## கல்விக் கல்லூரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வருட முழு நேரப் பயிற்சி நெறியும் ஒரு வருட கால உள்ளகப் பயிற்சியும் அடங்கும். இரு வருடங்களுக்கு வதிவிட பயிற்சிக் காலத்தில் மாதமொன்றுக்கு 1,000 ரூபா பெறுமதியான உணவு உறைவிட வசதிகளும், மூன்றாவது வருடத்தில் 1,500 ரூபா பெறுமதியான உணவு, உறைவிட வசதிகளும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்வோர் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

போட்டிப் பரீட்சைக்கு 1. 1. 94 இல் 22 வயதுக்கு உட்பட்டவர்களே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களை இல. 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (அ)

## காயமடைந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் கூடத் தொழிலுக்குச் சென்றிருந்த பத்திமா கொலின் (வயது 22), இரத்தினம் ஷசி (வயது 20) ஆகிய குருநகரைச் சேர்ந்த மற்றைய இரு மீனவர்களும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிறு முன்னிரவு 8 மணியளவில் இடம்பெற்றது. (உ-51)

## பூதவுடல் சமாதியில்

நேற்று முன்தினம் காலமான திருமுருக கிருபானந்த வாரியாரின் பூதவுடல் நேற்று அவரது சொந்த ஊரான காங்கேய நல்லூரில் சமாதி வைக்கப்பட்டது. (உ-எ)

## வாந்திபேதிக்கு பலி

வாந்திபேதியால் (கொலராவால்) பாதிப்புற்ற நிலையில் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட — அளவெட்டியைச் சேர்ந்த — குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானார். இவருடன் சேர்த்து யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் 15 பேர் வாந்திபேதியால் உயிரிழந்துள்ளனர். (உ-15)

## 'றுகுணு' இன்று திரும்புகிறது

வடமராட்சி, நவ. 9

றுகுணு கப்பல் இன்று கொழும்பு நோக்கிப் புறப்படவிருக்கிறது.

## சிங்களவரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தனாவின் பதில்கள் பிரசுரமாகியிருந்தன.

இந்த வரிசையில் —

தலைவர் பிரபாகரன், அமைச்சர் தொண்டமான், மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேல் மாகாண முதல்வர் சந்திரிகா விஜயகுமாரணதுங்க, ஜ. ஐ. தே. மு. தலைவர் காமினி திஸநாயக்கா, ஜே. வி. பியின் தற்போதைய தலைவரும் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வருபவருமான சோமவன்ச அமரசிங்க ஆகியோரின் பதில்கள் பிரசுரமாகும் என்றும் அப்பத்திரிகை அறிவித்திருக்கிறது. (உ-9)

## சமாதான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கமாட்டா; இராணுவத் தீர்வுக்கான முயற்சியே நடைபெறுகின்றது என்று அரசு தெளிவாக் கோடிகாட்டியுள்ளது என்றும் —

அவர் தமது காரசாரமான உரையில் கூறியிருக்கிறார்.

சமாதானம் குறித்து தான் தொடர்ச்சியாகத் தெரிவித்திருந்த ஆலோசனைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் அரசிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்காமையினால் சமாதான ஆலோசனையைக் கைவிட்டு போருக்கு தயாராவதற்குத் தான் தள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம் குறித்து புலிகள் எடுத்துவந்த முயற்சிகள் கைவிடப்பட்டுவிட்டன என்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தும் பிரகடனமாக இதனைக் கொள்ளலாம். இரு தரப்பினரின் நிலையிலும் ஏற்பட்டுள்ள இந்தக் கடினப் போக்கு கவலை தரும் விஷயமாக இருக்கிறது.

— இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-எ-6)

( சொட்டு நீரும் எமது சொத்தே )

அரிய சந்தர்ப்பம்!

தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(ஓ-6517)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
கணனி கல்வி நிலையங்களுடன்
இணைந்து நடத்தும்

# கணனி இலத்திரனியல் கண்காட்சி

* கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம்
* கணனியின் பிரயோகங்கள்
* கணனியின் விந்தைகள்
* சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள்
* இலத்திரனியல் கணனி தொழில் நுட்பம்

**பங்குபற்றும் நிறுவனங்கள்:**

- யாழ். பல்கலைக்கழகம்
- தொழில் நுட்பக் கல்லூரி - வட்டுக்கோட்டை
- கணனி விஞ்ஞான கல்வி நிலையம் - (C. S. A.)
- வணிக முகாமைத்துவக் கல்லூரி
- யுனிக்கோ கல்வி நிறுவனம்
- வட இலங்கை தொழில் நுட்ப நிறுவனம்
- பற்றீசியன் இன்ஸ்ரிரியூற்

இடம்: **யாழ். பல்கலைக்கழகம்**

காலம்: **1993 நவம்பர் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை**

பிரவேசம்: **ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-**

தென்மராட்சி மாணவர்கள் 12-11-93 வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்தும் வடமராட்சி மாணவர்கள் நண்பகல் 12 மணியிலிருந்தும் கண்காட்சியினைப் பார்வையிட வருமாறு வேண்டப்படுகின்றனர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[சி-6336]


## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான "பொன் அணிகள் போர்" உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2-15 மணி முதல் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகள் இடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மாவட்ட நிலை ஆட்டங்களில் இன்று பிற்பகல் 2-30 மணி முதல் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

**கொக்குவில் இந்துவில்**

★ 15 வயதுப்பிரிவு: -யாழ். இந்து எதிர் புங்குடுதீவு ம. வி.
★ 17 வயதுப்பிரிவு:- நெல்லியடி ம. ம. வி. எதிர் புங்குடுதீவு ம. வி.

**யாழ். இந்துவில்**

★ 15 வயதுப்பிரிவு:- யூனியன் எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன்.
★ 17 வயதுப்பிரிவு:- உரும்பராய் இந்து எதிர் கரவெட்டி விக்னேஸ்வரா.
★ 15 வயதுப்பிரிவு:- சென் ஜேம்ஸ் எதிர் சென்ஹென்றீஸ்.

**ஹாட்லியில்**

★ 15 வயதுப்பிரிவு:- நெல்லியடி ம. வி. எதிர் உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

★ ★ ★

மருதனார்மடம் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2-30 மணி முதல் நடைபெறவிருக்கின்றன. விவரம் பின்வருமாறு:-

**ஸ்கந்தாவில்**

★ 15 வயதுப்பிரிவு:- ஸ்கந்தா எதிர் உரும்பராய் இந்து.
★ 19 வயது:- உரும்பராய் இந்து எதிர் மானிப்பாய் இந்து.

**மானிப்பாய் இந்துவில்**

★ 17 வயதுப் பிரிவு:- ஸ்கந்தா எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வி. க.
★ 19 வயதுப் பிரிவு:- ஸ்கந்தா எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வி. க.

(உ-89)

★ ★ ★

யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- பற்றிஸியன் கோல்ட்ஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் கறுப்பு அணி.
★ 4.30 மணி:- பற்றிஸியன் பச்சை அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி.

## பொருள்கள் விநியோகம்

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஏப்ரல், மே, ஜுலை மாதங்களுக்கான மாண்வர் உணவு முத்திரைகளுக்குரிய பொருள்கள் விநியோகம் நாளை ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டது.

உணவு முத்திரைக்கு 70 வீதம் குத்தரிசியும், 10 வீதம் சர்க்கரையும், 10 வீதம் அவலும், 10 வீதம் உழுந்தும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை மண்ணெண்ணெய் விநியோகமும் மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கான ஒக்டோபர் மாத கடைசி இரண்டு வாரங்களுக்கும் உரிய பொருள்கள் விநியோகமும் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன. (உ-162)



## மியாமியில் அரை விலை

சகல விதமான ஆடைகளும் தீபாவளியை முன்னிட்டு வழமைபோல் அரை விலைக்கு விற்கப்படுகின்றன என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**மியாமி காமென்ஸ்**
40, கச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(27963)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
**31-01-1953**

● ● ●

அநியாய அழிப்பு:
**09-11-1988**

### சோமசுந்தரம் ஜெயக்குமார்

(வருமான மேற்பார்வையாளர் - பிரதேசசபை, உடுவில்)

எத்தனை ஆண்டுகள் சென்று மறைந்தாலும்
நித்தம் உனை நினைத்தே ஏங்கிடும்
எம் நெஞ்சம் நீங்கா நினைவுகளுடன்
என்றும் உன் பெயரை உச்சரிக்கும்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், உறவினர்கள்.

அளவெட்டி தெற்கு. (27946)

## மரண அறிவித்தல்கள்

### காசுபதி இரத்தினம்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காசுபதி இரத்தினம் அவர்கள் 19-09-1993 அன்று மண்டைதீவில் காலமாகிவிட்டார். இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும், இரத்தினேஸ்வரி, புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வில்வராசா (மகன்)

எஸ். ரேவதி,
C/o வில்வராசா,
18 A, மூத்தவிநாயகர் வீதி,
யாழ்ப்பாணம். (27966)

### சண்முகம் பொன்னையா

வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரம் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சண்முகம் பொன்னையா 21-10-1993 இல் வேலணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் முத்துப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா நகுலேஸ்வரியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரெத்தினம், சந்திரமதி, நவரெத்தினம், ராதா மற்றும் இராசரெத்தினம், யோகரெத்தினம் ஆகியோரின் அன்பு தந்தையும், லட்சுமி, உதயராணி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகன், யுகன், சுதன், நிசான், நிசா, ஜெயராதா, நிஜீனா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அமரரின் துன்பியல் நிகழ்வுகள் இன்று (9-11-93) எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பொ. யோகரெத்தினம் (மகன்)

இல 5, பால்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (27965)

### தம்பையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

விழிசிட்டி, கயிந்தப்பை தெல்லிப்பழை வாசியும் சந்திரபுரம் உடுவிலில் தற்காலிகமாக வாழ்ந்தவருமான தம்பையா சுப்பிரமணியம் நேற்று 8-11-93 இல் அமரத்துவம் அடைந்து விட்டார்.

இவர் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் முருகானந்தன் (நோர்வே), சிவானந்தன் (ப.நோ.கூ.ச தெல்லிப்பழை), கலாநிதி கிருஷ்ணானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தலெட்சுமி, சிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமணனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 8-11-93இல் உடுவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சிவனேஸ்வரி, (மனைவி)
சிவானந்தன். (மகன்)

சந்திரபுரம்,
உடுவில்,
சுன்னாகம். (27967)

## மரண அறிவித்தல்கள்

### துரைச்சாமிஐயர் தியாகராசாஐயர்

(இராசாஐயர்)
(ஈவினை மத்தி கற்பக விநாயகர் ஆதீனம்)

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகராசாஐயர் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், ஞானசேகரஐயர் (உதவி வைத்திய அதிகாரி, கண்டி), கெங்காதரக்குருக்கள் (விநாயகர் தேவஸ்தானம் - ஈவினை), சுவாமிநாதஐயர் (இலங்கை வங்கி, திருகோணமலை), லலிதாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானலட்சுமி, விஜயலட்சுமி, நிர்மலா, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜேஸ்வரன், சர்வேஸ்வரன் கமலேஸ்வரன், பாலேஸ்வரன், பாலச்சந்திரன், வசுந்தரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
கெங்காதரக்குருக்கள் (மகன்)

ஈவினை பிள்ளையார் கோயில்,
சுன்னாகம். (27968)

### திருமதி த. சகுந்தலாதேவி

மண்டதீவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஜ"ம்மாலேன் இலக்கம் 22 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சகுந்தலாதேவி காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற நடராசா, இரத்தினமலர் ஆகியோரின் மகளும் காலம் சென்ற ஆசிரியர் தர்மலிங்கம், புவனேஸ்வரி அவர்களின் மூத்தமருமகளும் தர்மகுலேந்திரனின் அன்பு மனைவியும் கமலரூபன் (ரவீந்தன்), சர்மிளா, சஜிதா, சஜிரேகா ஆகியோரின் தாயாரும் குணநேசராசா (கனடா), லெட்சுமி, சரோசா (கனடா), நந்தினிதேவி (கனடா) ஆகியோரின் சகோதரியும் பற்பநாதன், விஜயகுமார் (கனடா), மகேந்திரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் சண்முகதாஸ் (பனை அபிவிருத்திசபை), மல்லிகாதேவி, ஜானகி(கனடா), கருணாகரன் ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜிம்மா லேனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 9-11-93 காலை பத்து மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
தர்மகுலேந்திரன்

22, ஜ"ம்மா லேன்
யாழ்ப்பாணம். (27964)


**விவசாயிகளே!**
**தொழிற்சாலை உரிமையாளர்களே!**
**இயந்திரப் பாவனையாளர்களே!**

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில்
பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான
குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.




உங்கள்
* நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
* மின் பிறப்பாக்கியை இயக்க

**மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே கொண்டு சக்தியை தரவல்லது தான்**

ஆக்கிவாயு பிறப்பாக்கி

(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

இரகசியம் ஒன்றும் இல்லை

ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லன. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும்.

முதற்கட்டமாக வூல்சிலி (Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

எல்லா நாட்களிலும் காலை **10** மணி முதல் பிற்பகல் **2-30** வரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்

எமது அலுவலகம்:
**சக்திப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
தமிழீழ விடுதலைப் புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி/6326)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org